# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:148** **தேதி:-10.02.2017**

***சென்னையில் நடைபெற்ற விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு முடிவுகள்***

அன்பார்ந்த தோழர்களே,

தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த செயற்குழு சென்னை ஆனந்தவல்லி திருமண மண்டபத்தில் மாநில தலைவரும் அகில இந்திய உதவி பொது செய்லாளருமான தோழர் S. செல்லப்பா தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தமிழ் மாநில சங்க நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்களுடன் அனைத்து கிளை செயலாளர்களும் பங்கேற்றனர்.

250க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்ற அந்த விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவிற்கு வந்திருந்த அனைவரையும் தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் V.மணியன் வரவேற்றார். நமது மாநில சங்கத்தின் துணைத்தலைவர் தோழர் K. மாரிமுத்து பல்வேறு தியாகிகளை நினைவு கூர்ந்து அஞ்சலி உரையாற்றினார். மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா அவர்களின் தலைமையுரைக்கு பின்னர் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவிற்கான அறிக்கையினை முன்வைத்து உரையாற்றினார்.

சென்னையில் நடைபெற்ற 8வது அனைத்திந்திய மாநாட்டில் மீண்டும் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் P.அபிமன்யு இந்த செயற்குழுவை துவக்கி வைத்து உரையாற்றினார். இவர் தனது துவக்க உரையில், BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அனைத்திந்திய மாநாட்டை நடத்திய தமிழ் மாநில சங்கத்தை பாராட்டியதோடு, அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளையும் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் BSNL நிறுவனத்தை புத்தாக்கம் செய்ய வேண்டும் என்கிற நமது நோக்கத்தை வெற்றி பெறச் செய்வதற்காக 06.02.2017 அன்று புதுடெல்லியில் கூடிய அனைத்து சங்க கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் அதன் அவசியம் பற்றியும் மிகத்தெளிவாக எடுத்துரைத்தார்.

உணவு இடைவேளைக்கு பின் விரிவடைந்த மாநில செயற்குழுவில் பங்கேற்ற தோழர்கள், மாவட்டத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் விவாதத்தில் பங்கேற்றனர். மாநில செயலாளர் தொகுப்புரை வழங்கினார். அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் தோழர்களின் சில கேள்விகளுக்கு விளக்கம் அளித்து நிறைவுரை ஆற்றினார். அதற்கு பின் கீழ்கண்ட முடிவுகளை விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

1. 8வது அனைத்திந்திய மாநாட்டை வெற்றிகரமாக்கிட கடுமையான உடல் உழைப்பினை செலுத்திட்ட செந்தொண்டர்கள், அற்புதமாக நிதியுதவி வழங்கிய தோழர்கள், விளம்பரம் தந்துதவியர்கள், மற்றும் அனைவருக்கும் இந்த விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு நன்றிகளையும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.
2. எதிர் வரும் மார்ச்-8 சர்வதேச மகளிர் தினம், மார்ச்-22 BSNL ஊழியர் சங்க அமைப்பு தினம், ஏப்ரல் 14 டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கார் அவர்களின் பிறந்த தினம் ஆகிய தினங்களை மிகச்சிறப்பாக கடைபிடிக்க வேண்டும் என விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு முடிவெடுத்துள்ளது.
3. பிப்ரவரி-22 ஒப்பந்த தொழிலாளர்கள் கோரிக்கைக்காக டெல்லியில் நடைபெற உள்ள பேரணியில் ஒப்பந்த ஊழியர்களுடன் பெரும்பாலான BSNL ஊழியர் சங்கத்தோழர்களும் பங்கேற்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.
4. ஜனவரி, 29,30 மற்றும் 31ஆம் தேதிகளில் பணத்தட்டுப்பாடு எதிர்ப்பு நடவடிக்கைக் குழுவின் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ள அனைவரையும் வாழ்த்துவதோடு எதிர்காலத்தில் இந்தக் குழுவின் நடவடிக்கைகள் அனைத்திலும் முழுமையாக பங்கேற்க வேண்டும் என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.
5. பிப்ரவரி 6ஆம் தேதி டெல்லியில் கூடிய அனைத்து சங்கங்களின் கூட்டத்தில் இந்த நிதியாண்டில் BSNLன் வருவாய் அதிகரிப்பு என்பது அத்தியாவசிய தேவை என்ற அடிப்படையில், பிப்ரவரி 10 முதல் மார்ச் 31 வரை BSNLல் உள்ள அனைத்து அதிகாரிகளும், ஊழியர்களும் தினமும் ஒரு மணி நேரம் அதிகமாக பணியாற்றுவது, அந்த அதிகப்படியான நேரத்தில் BSNL பொருட்களை மார்க்கெட்டிங் செய்வது மற்றும் பழுதுகளை நீக்கும் பணிகளில் ஈடுபடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. BSNL நிறுவனத்தின் வருவாயை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ள இந்த நடவடிக்கைகளை தமிழகம் முழுவது அனைத்து சங்க தோழர்களையும் ஒன்றிணைத்து வெற்றிகரமாக்கிட தேவையான நடவடிக்கைகளை BSNL ஊழியர் சங்கம் கிளை/ மாவட்ட மட்டங்களில் மேற்கொள்வது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
6. BSNL சிறுவனத்தின் தனியார்மயமாக்கல்/கேந்திர பங்கு விற்பனை என்கிற நிதி ஆயோக்கின் முடிவுகளை அமல்படுத்த வேண்டும் என்கிற பிரதமர் அலுவலகத்தின் கடிதத்தை எதிர்த்தும், துனை டவர் நிறுவனம் அமைப்பதை எதிருத்தும், BSNL நிறுவனம் 4G சேவைகளை வழங்குவதற்கு வசதியாக அதற்கு இலவசமாக 700 MHz ஸ்பெக்ட்ரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும், ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்திற்கு வழங்கப்படும் சலுகைகளை எதிர்த்தும் மார்ச் 9 ஆம் தேதி ராஜ்பவன் மற்றும் மாவட்ட ஆட்சியல் அலுவலகம் நோக்கி பேரணி நடத்துவது என அனைத்து சங்க கூட்டம் முடிவெடுத்துள்ளது. அதனையும் தமிழகத்தில் வெற்றிகரமாக்க இந்த விரிவடைந்த மாநில செயற்குழு முடிவு எடுத்துள்ளது.
7. 8வது தமிழ் மாநில மாநாட்டை ஏப்ரல் மாதத்தில் ஈரோட்டில் நடத்துவது என்று இந்த விரிவடைந்த மாநில செயற்குழு முடிவு செய்தது. இதற்காக ஆகும் செலவை ஈடுகட்ட ஈரோடு மாவட்டம் தவிர இதர மாவட்டங்கள் கீழ்கண்ட நிதியினை வசூலித்து மார்ச் மாதம் 15ஆம் தேதிக்குள் மாநில சங்கத்திற்கு அனுப்பி விடுவது எனவும், கோவை, கடலூர், CGM அலுவலகம் ஆகிய மாவட்ட சங்கங்கள் மார்ச் மாதம் 15ஆம் தேதிக்குள் மாவட்ட மாநாடுகளை முடித்து விட வேண்டும் என்றும் சென்னை விரிவடைந்த மாநில செயற்குழு முடிவெடுத்துள்ளது.

மாநில செயற்குழுவிற்கு பின் மாலை 4 மணி அளவில் BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அனைத்திந்திய மாநாட்டை சென்னையில் வெற்றிகரமாக நடத்திய செந்தொண்டர்களை அகில இந்திய பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, உதவி பொதுச் செயலாளர் தோழர் S.செல்லப்பா, தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், BSNLWWCC தமிழ் மாநில அமைப்பாளர் தோழர் P.இந்திரா ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். அதற்கு பின் செந்தொண்டர்களுக்கு மாவட்ட வாரியாக பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் நினைவு பரிசை வழங்கி கௌரவித்தார்.

இந்த விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு மற்றும் பாராட்டு விழா ஆகியவற்றில் பங்கேற்ற தோழர்களுக்கு BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் P.சந்திரசேகர் நன்றி கூறி நிறைவு செய்தார்.

விரிவடைந்த தமிழ மாநில செயற்குழுவின் முடிவுகளை முழுமையாக அமல்படுத்துவோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**

**மாநில மாநாட்டிற்கான மாவட்டங்களுக்கான நிதிக் கோட்டா**

| வ. எண் | மாவட்டம் | நன்கொடை ரூ. | வ. எண் | மாவட்டம் | நன்கொடை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | நீலகிரி | 10,000 | 10 | குடந்தை | 5,000 |
| 2 | கோவை | 40,000 | 11 | தஞ்சை | 5,000 |
| 3 | சேலம் | 30,000 | 12 | காரைக்குடி | 5,000 |
| 4 | தர்மபுரி | 20,000 | 13 | திருச்சி | 20,000 |
| 5 | கடலூர் | 20,000 | 14 | நாகர்கோவில் | 20,000 |
| 6 | வேலூர் | 15,000 | 15 | திருநெல்வேலி | 15,000 |
| 7 | பாண்டிச்சேரி | 10,000 | 16 | தூத்துக்குடி | 15,000 |
| 8 | CGM(O) | 20,000 | 17 | விருதுநகர் | 15,000 |
| 9 | CGM(P) | 5,000 | 18 | மதுரை | 30,000 |